**குண்டசாலை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குண்டசாலைபிரதேச சபையின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்லெகெலே ஜனசவிகம வீட்டு கருத்திட்டம் தொடர்பாக 1.044 ஹெக்டயார் காணி மற்றும் ஏனைய 16 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,437,165 ஆன பெறுமதி மூலதனமாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லாததுடன், பல்லெகெலே அரசஉருவத்தின் அருகில் சந்தை நிர்மானித்தலின் முடிவுப்பெறுமதிரூபா 7,912,792 குறைவாகக் மூலதனமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) ரூபா 780,000 பெறுமதியான 05 ட்ரேலர்கள் மற்றும் அன்பளிப்பாக கிடைத்திருந்த ட்ரேலரின்பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லாததுடன், டெக்டர் ஒன்றின் பெறுமதி ரூபா 1,000,000 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கழிவு பொருள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றிருந்த மற்றும் சபையினால்மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 95,957,713 பெறுமதியான கட்டிடங்கள்,இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) குண்டசாலை ஆயுர்வேதத்திற்கு அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 133,075 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லாததுடன்,ரூபா 474,468 ஆன ஔடத இருப்பு மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் இறுதி இருப்பில் பௌதீகமாக இல்லாதிருந்த ரூபா 4,837,105 ஆன நீர் வேலை பொருல் இருப்பு மற்றும் கூட்டெறு பசலை இருப்பின பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பெற வேண்டிய மீள்நிரப்பு சம்பளம் ரூபா 1,398,717 மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டினுள் தீர்க்கப்படாத முற்பணம்ரூபா 1,166,408 தொகையை முற்கொடுப்பணவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் செலவின கடன்கொடுத்தோர் ரூபா 2,406,955 தொகையை குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்ததுடன், செலுத்தவேண்டிய ரூபா 700,000 ஆன வேலை கடன்கொடுத்தோர் 2 மீதிகள் நிதிக்கூற்றுக்களின் கைவிடப்பட்டிருந்தன.

(ஓ) இலங்கை வங்கியின் நடாத்திச்செல்லப்படும் 4 நிலையான வைப்புகள் தொடர்பாக வருடாந்த வட்டி ரூபா 1,349,707 ஆன தொகையை மிகையாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 எதிர்பாறாத பொறுப்பு

மொரகஹபிட்டிய வியாபார தொகுதியின் பெறுகை வழங்குவது, கட்டிடங்கள் நிர்மானித்தல், அனுமதியற்ற நிர்மானங்கள் தடைசெய்வது மற்றும் பாதைகள் தொடர்பாக சபைக்கு எதிராக 15 முறைபாட்டாலர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்குகள் தொடர்பாக கணக்குகளின் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 9,575,292 ஆன 3 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளின் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையில் ரூபா 416,267 தொகை வித்தியாசம் ஆனது.

### 1.3.4 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 15,096 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் ரூபா 15,239 ஆன செலவு மீதியாக இருந்த போதிலும் அத்தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 க்கு பெற வேண்டிய 3 கணக்கு மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 52,150,392 ஆனதுடன் அதன் 1 வருட காலத்தை விஞ்சி இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,085,819ஆக இருந்தது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 க்கு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 45,741,869 ஆனதுடன் அதன் 1 வருட காலத்தை விஞ்சி இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,137,564 ஆனது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 5,935,900 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) அதிகாரச்சட்டங்கள் | |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 19(i) பந்தி | அனுமதியின்றி 12 ஊழியர்களை நியமித்திருந்ததுடன், அவ் ஊழியர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்காது 2016 மே முதல் ஒக்டோபர் மாதம் வரை சபை நிதியத்தின் மூலம் ரூபா 1,110,500 ஆன சம்பளம் வழங்கப்படடிருந்தது. |
| (ii) 19 (xi) பிரிவு | பிரதேச சபைக்கு சொந்தமான பல்லேகலே ரஜரூப அருகில் 2 பர்சஸ் மற்றும் 1 பர்சஸ் அளவான 2 காணி துண்டுகள் முறையான அனுமதி மற்றும் எவ்வித எழுத்து மூல ஒப்பந்தங்களுமின்றி வியாபார நடவடிக்கைக்காக 2 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) 149 பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் உள்ள ஹோட்டலின் 1 சதவீத வரையான வரி பெற்றிருக்கவில்லாததுடன், 4 ஹோட்டல்களின் முறையான கணக்கு பெறப்படாமை வரி அறவிடப்பட்டிருந்தது. |
| (iv) 154 பிரிவு | ஏலத்தில் விற்கப்பட்ட 4 காணிகள் தொடர்பாக காணி பிரிப்பதற்கான அனுமதிக்கும் போது தற்காலிக மதிப்பீட்டின் பிரகாரம் 1 சதவீதமான பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் காணி விற்பனை முடிவடைந்த பின்னர் உள்ளவாறான விற்பனை பெறுமதி பரிசீலிக்கப்பட்டு வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (v) 219(1) பிரிவு | 6 முன்னால் உறுப்பினர்களினால் நேரடியாக மற்றும் மறைமுகமாக 5 கடைஅறைகள் மற்றும் பிரதேச சபை பழய கட்டிட மேல் மாடியில் சதுர அடி 86.4 உம் 47.45 உம் கொண்டஇரண்டு அறைகள் எடுத்திருந்தனர் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------------------------ | |
| | (i) நிதிப்பிரமாணம் 189 | 2010 வருட காலபகுதிக்கான ரூபா 76,599 பெறுமதியான 4 மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாகநடவடிக்கை எடக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 756(1) | 2016 வடத்திற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2016 திசெம்பர் 07 திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்ட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளுராச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை<br>------------------------------------------------------------------<br>1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 மற்றும் 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 கொண்ட உள்ளுராட்சி சுற்றறிக்கை<br>------------------------------------------------------------------ | |
| | (i) 10 பந்தி | (i) குத்தகைகாரர்களால் கடையறை உப குத்தகைக்கு வழங்கி வாடகையை பலமுறை திருத்தி சபைக்கு செலுத்தும் வாடகை பணத்திற்க அதிகமாக 90 சதவீத இலாபம் பெற்றிருந்த போதும் சபை மூலம் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>(ii) கடையறைகளை உப குத்தகைக்கு வழங்கள் பூரண தடை என மற்றும் அது தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டிருக்கையிலும் அடோனி அதிகாரத்தின மூலம் 6 கடையறை உரிமையாளர்கள் மூலம் கடையறைகள் வேறு நபருகளுக்கு விற்கப்பட்டு ரூபா 7,600,000 ஆன பணம் பெறப்பட்டிருந்தது. |
| (ஈ) | பெறுகை வழிகாட்டி கோவையின் 3.4.3 | பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலை பட்டியல்கள் பெறப்படாமல் மற்றும் முறையான பெறுகை நடைமுறைகளுக்கு வெளியில் 9 சந்தர்ப்பங்களில் ரூபா 1.116,300 |

பெறுமதியான கொள்வனவுகள் செய்யப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 56,976,713 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 94,887,182 ஆனமையால் முன்னைய வருடத்திற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 37,910,469 ஆன வீழ்ச்சியொன்று காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 37,910,469 ஆன வீழ்ச்சிக்கு 2 வருமான விடயங்களின் ரூபா 28,082,062 ஆன குறைவும் 3 செலவின விடயங்களின் ரூபா 5,947,812 ஆன அதிகரித்தலும் தாக்கம் விளைவித்திருந்தது.

### 2.3 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய 2 ஆண்டுகளுக்கு மொத்த நடைமுறை சொத்து மற்றும் மொத்த நடைமுறை பொறுப்பு இடையில் விகிதம் முறையே 1.7:1 , 1.27:1 மற்றும் 1:0.7 ஆனது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** சபைக்கு சொந்தமான 3 வியாபார தொகுதிகளில் 15 கடையறைகள் 2010 ஆண்டு முதல் குத்தகைக்கு வழங்கும் போது சில குத்தகைக்காரர்களிடமமிருந்து ஒரு முறை செலுத்தும் பணம் அறவிப்படாமை காரணமால் சாவி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.அறைகள் பெற்றுக்கொள்ளாவிடின் மீள் பெறுகைகள் நடைமுறைப்படுத்தி சபையின் சொத்துக்களின் உயர்பற்ச பிரயோசனம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லாததுடன், வருமானமும் இழந்திருந்தது.

**(ஆ)** சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் மதிப்பீட்டு குத்தகை வாடகையை அறவிடாது சபை தீர்மானத்தின் படி கடையறை வாடகை அறவிடபட்டதனால் சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

**(இ)** வீத வரி 5 வருடங்களுக்கு ஒரு முறை வீத வரி மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், 2007 ஆண்டின் வீத வரி மதிப்பீட்டின் பிரகாரம் 2016 ஆண்டு வரை வீத வரி அறவிடப்பட்டதனால் கனிசமான வருமானம் சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது.

**2.4.2 வீதவரி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ)** மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 5,935,770 ஆன நிலுவை மீதி நிலவிய போதிலும் ஆண்டினுள் அவையின் ரூபா 2,989,421 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 50 சதவீத அளவானது.

**(ஆ)** சபை அதிகார பிரதேசத்திலுள்ள அரச நிறுவங்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,078,912 ஆன வீதவரி அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 3,029,884 ஆன நிலுவை மீதியின் ரூபா 1,706,647 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 56 சதவீதம் ஆனதுடன், ஆண்டின் பற்றுச்சீட்டிடலினும் 66 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.4.4 ஏனைய வருமானம்**

(அ) **முச்சக்கர வண்டி நிறுத்துமிடக் கட்டணம்**

மீளாய்வாண்டின் முச்சக்கர வண்டி நிறுத்துமிடக்கட்டணம் பற்றுச்சீட்டிடலுக்கு நடவடிக்கை எடுக்க இல்லாததுடன், 2016 சனவரி 1 திகதிக்கு நிலவிய நிலுவையின் ரூபா 1,775,449 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

(ஆ) **தகவல் பரிமாற்றக் கோபுர வரி**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 152(1) பிரிவின் பிரகாரம் சபை அதிகார எல்லைனுள் உள்ள தகவல் பரிமாற்றக் கோபுரங்களிற்காக வரி அறவிடப்பட வேண்டிய போதிலும், 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் ரூபா 48,000 ஆன வரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) **குப்பை வரி**

மீளாய்வாண்டுஆரம்பத்தில்ரூபா 1,359,743 ஆன குப்பை வரி மீதியின் ரூபா 547,900 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது நிலுவையின் 40 சதவீதம் மாத்திரமே. ஆண்டின் பற்றுச்சீட்டிடலினும் 48 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 39,780 ஆன நிலுவை மீதி நிலவிய போதிலும் ஆண்டினுள் அவையின் ரூபா 4,109 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 10 சதவீத அளவானது.

**2.4.5** நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 730,000 உம் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 55,676,063 ஆனது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆண்டின் நிர்மானிக்கப்பட்டிருந்த திகன வியாபார கட்டிட தொகுதியின் மேல் மாடியில் 4 கடையறைகள் 2017 மார்ச் 31 திகதி வரை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட கல்பிஹில்ல சுடலை, ஓய்வூ விடுதி நிர்மானம் மற்றும் மலசல கழிவைஅகற்றுதலுக்காக காணியொன்று கொள்வனவு செய்தல் போன்ற கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ)** பிரதேச சபை அதிகார எல்லையில் மக்களின் பொது வசதிகளை மேம்படுத்தல் பிரதேச சபையொன்றினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய பொறுப்பான போதும் கால்வாய்த் தொகுதி சுத்தம் செய்தலும், குப்பை அகற்றி நகரை சுத்தமாக வைத்துக் கொள்ளல் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2007 ஆண்டின் கொள்வனவு செய்திருந்த பிரதி எடுக்கும் இயந்திரம் பழுதுபார்ப்பதற்கு அதை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு 2008 ஆண்டில் பெற்றுக் கொடுத்திருந்த போதிலும்,பழுதுபார்க்கப்பட்டுஅழைப்பித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் கணிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.

**(இ)** 1999 மற்றும் 2010 ஆண்டுகளுக்கு இடையில் 42 சந்தர்ப்பங்களில் வைப்புச்செய்யப்பட்ட போதும் மாற்றப்படாத வைப்புக்கள் ரூபா 299,787 தொடர்பாக பரிசீலனை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** 108 சந்தர்ப்பங்களில் நடைமுறை கணக்கிற்கு செலவு மீதான விபரம் இல்லாத ரூபா 622,564 ஆன தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ)** 54 சந்தர்ப்பங்களில் நடைமுறை கணக்கிற்கு வரவு செய்யப்பட்டிருந்த விபரம் இல்லாத ரூபா 929,753 ஆன தொகையை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

--------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொரகஹபிட்டியவத்த மற்றும் திகண வியாபார கட்டிட தொகுதிகளின் மதிப்பீட்டு வாடகையை விட குறைந்த குத்தகை தொகை அறவிடப்பட்டிருந்ததனால் 2015 மற்றும் 2016 நவம்பர் வரை காலபகுதியினுள் சபைக்கு ரூபா 7,787,500 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 நவம்பர் 30 திகதி அன்று திகண மற்றும் மொரகஹபிட்டிய வியாபார கட்டிட தொகுதிகளில் கடையறைகளின் ரூபா 1,612,965 ஆன தொகை நிலுவையாக இருந்தது.

**(இ)** குண்டசாலை பிரதேச சபை அதிகார எல்லைனுள் புது வியாபார நிலயங்களுக்காக கட்டிட திட்டம் அனுமதிக்கப்பட்டு 3 வருடங்களை விஞ்சியிருந்த 45 வனிகக் கட்டிடங்களுக்கான தற்காலிக மதிப்பீட்டின் படி அல்லது வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** பிரதேச சபையின் அனுமதியின்றி கடையறை குத்தகைகாரர்களால் குத்தகைச் சொத்துக்களில் அமைப்பை மாற்றுதல் மற்றும் குத்தகைச் சொத்துக்களுக்கு புதிதாக பகுதிகளை சேர்த்தல் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(உ)** சபை பதவியணியினரின் அங்கீகரிக்கப்பட்ட 12 பதவிகளில் 13 ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் 42 மிகையானது.

**(எ)** பல்லெகெலே நிர்மானிக்கப்பட்ட வாராந்த சந்தை குத்தகைக்கு வழங்கும் போது பெறுகை நடைமுறைகளுக்குமாற்றமாக 2013 திசெம்பர் 26 திகதி மஹா சபை அனுமதியின் படி முறையற்ற அடிப்படையில் குத்தகைகாரர்கள் தெரிவு செய்யப்பட்டு குத்தகை வழங்கி ரூபா 4,950,000 ஆன தொகை அறவிடப்பட்டிருந்தது. 2016 ஜூன் மாதத்தின் பின் சந்தை அமுழ்படுத்தும் நிலையில் இருக்கவில்லை.

**(ஏ)** மொரகஹபிட்டிய வியாபார கட்டிட தொகுதியில் இலக்கம் 27 மற்றும் 28 கடைகள் குத்தகைக்கு வழங்கபட்டுஒரே முறையில் பெற வேண்டிய ரூபா 1,510,000 ஆன தொகைக்கி பதிலாக ரூபா 200,000 மாத்திரம் அறவிடப்பட்டு 2016 மார்ச் மாதத்தில் எடுத்த சபை தீர்மானத்தின் மீது அத் தொகையை மீள் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

----------------------------------------------------------------------------------------------------------

பிரதேச சபைக்கு சொந்தமான பொது வேலைகளுக்காக கிடைத்திருந்த பல்லெகலே ரஜரூப அருகில் உள்ள 20 பர்சஸ் அளவான காணியை எவ்வித பிரயோசனமுமின்றி பாதுகாப்பில்லாம இருந்தது.

**3.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கல்**

**-----------------------------------------------------------**

பொது சேவைக்காக பிரதேச சபைக்கு சுவீகரிக்கப்பட வேண்டிய காணி பங்குக்கு பணம் செலுத்துவதில் தேவையின்றி மகா சபை தீர்மானம் பிரகாரம் அதற்காக பணம் செலுத்துவதற்கு அனுமதி வழங்கி காணிக்கு வீடு அபிவிருத்தி அதிகாரிசபைனால் செலுத்தும் படி அறிவித்த ரூபா 4,923,640 ஆன மொத்த பணத்தின் 25 சதவீதம் ஆன ரூபா 1,230,910 ஆன தெகையை சபை நிதியத்தினால் செலுத்திருந்தது.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாண பிரதான அமைச்சின் 2012 ஆண்டின் பெற்றிருந்த டிபெண்டர் வணடியின் வெளி மற்றும் உள்ளே பழுதுபார்ப்பதற்காக 2013 ஆண்டின் ரூபா 2,150,000 செலுத்திருந்த போதிலும் பழுதுபார்ப்பதன் பின்னர் வண்டியை ஓட்டத்தில் செலுத்தாமை அலுவலகத்தின் முன்னால் தரிக்கப்பட்டிருந்தமையால் அதற்காக செலவான பணம் பயன்படாத செலவாக இருந்தது.

(ஆ) பாததும்பர பிரதேச சபையின் மடவல உள்ள இறைச்சி கடை முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் ரூபா 2,500,000 க்கு குத்தகைக்கு எடுத்த குத்தகையாளரால் அது அருகில் குண்டசாலை பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்ட தனியார் இறைச்சிக் கடையில் குண்டசாலை பிரதேச சபையினால் அனுமதி வழங்கியமையின் ரூபா 2,500,000 ஆன வருமானம் இழப்பிருந்தது.

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2014 பொருள் மெய்மையாய்வின் போது பிரதேச சபை பிரதான அலுவலகம் மற்றும் கிடங்கில் கணிப்பீடுக்காக முன்வைக்கப்படாத பண்டக 426 வகைகள் தொடர்பாக 2016 திசெம்பர் 08 ஆம் திகதி வரைலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 ஒப்பந்தக் பட்டுப்பாடு**

**(அ) பல்லெகெலே அரசஉருவம் அருகில் சந்தை நிர்மானித்தல்**

**(i)** பிரதேச சபை நிதியம், மாகாண குறித்த அபிவிருத்தி அன்பளிப்பு மற்றும் பெறுனர்களிடமிருந்து சேர்க்கப்பட்ட பணம், போன்ற ஒதுக்கீடுகளை பயன்படுத்தி குண்டசாலை கம்உதா வளவில் அரசஉருவம் அருகில் அமைந்துள்ள காணியின் ரூபா 9,080,564 தொகை செலவிடப்பட்டு சந்தை நிர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டத்தை அமுழ்படுத்தும் போது சாத்தியபாட்டு ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லாததுடன், பெறுகை நடைமுறைக்கிமாற்றமாகவேலை செய்வதற்கு 03 குழுகளுடன் 7 கட்டங்களின் கீழ் உடன்படிக்கைசெய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மானத்திற்காக பொறியியளாலரின் அனுமதியின்றி தொழிள்நுற்ப உத்தியோகத்தரினால் ரூபா 7,742,113 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டை விஞ்சி ரூபா 1,338,451 செலுத்தப்பட்டிருந்தது.

**(ii)** மதிப்பீடு, செலுத்தப்பட்ட அறிக்கை, அளவு மற்றும் பௌதீக பரிசோதனயின் போது இலக்கம் 16 வேலை விடயத்தின் கீழ் 1" மற்றும் ½ குழாய் உபயோகித்து கூரயை செய்வதற்கு 24 காப்பைகளுக்காக ரூபா 947,136 செலுத்திருந்த போதிலும்,பௌதீக பரிசோதனயின்போது 17காப்பைகள் இருந்ததுடன், அவைகளின் பெறுமதி ரூபா 670,888 ஆக இருந்தமையால் 7 காப்பைகளுக்காகரூபா 276,248 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. வேலை விடயம் இலக்கம் 17 இன் கீழ் 1½" x1½" 3mmபொக்ஸ்பார்

828.35 மீற்றர் பொருத்தப்பட்டிருந்தது என ரூபா 536,729 செலுத்தப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனயினையின் போது பொக்ஸ்பார்மீற்றர் 567.35 மாத்திரம் இருந்தமையால் 261 மீற்றர்களுக்காக ரூபா 168,867 தொகை மேலதிகமாக செலுத்தப்ட்டிருந்தது.

**(ஆ) இஹலவெல பிரிவில் பஞ்சபிட்டிய பாதை அபிவிருத்தி செய்தல்**

---

2016 ஆண்டு மாகாண குறித்த அபிவிருத்தி உதவின் கீழ் மேல் குறிப்படப்பட்ட பாதை அபிவிருத்திக்காக ரூபா 416,346 செலுத்தப்பட்டிருந்தது . பாதை தொடர்பாக செய்யப்பட்ட Rebound hammer test பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கொன்க்ரீட் கலவையின் உறுதி 20 க்கும் குறைந்த மட்டத்தில் நிலவியதன் காரணமாக கொன்க்ரீட் கலவை உறிய நியமதிதிற்கு மாற்றமானதுடன், பாதையின் 3 இடங்களில் கொன்க்ரீட் தரையின் தடிப்பு பல அளவுகளில் நிலவியது அதன் பிரகாரம் மதிப்பீட்டின வேலை விடயம் 2 ன் படி 1:2:4 (19mm) அளவிற்கு 3090 கண மீற்றர்க்கு கொன்க்ரீட் இடப்பட வேண்டிய போதும் 2017 மார்ச் 31 திகதி மேறகொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவ் அளவில் கொன்க்ரீட் இடப்பட்டிருக்கவில்லை.

**(இ) குண்டசாலை ரங்சிரிகம மழை நீர் வழிந்து செல்வதற்காக ருக்மல் ஓய வரை கால்வாய் தொகுதி அமைத்தல**

---

2016 ஆண்டு மாகாண குறித்த அபிவிருத்தி உதவின் கீழ் குறை அபிவிருத்தி/தனிப்பட்ட கிராம வேலைத்திட்டத்தின் கீழ் பல்லேகெலை இரண்டாம் தரைப்படை தலைமையாக படைப்பிரிவிற்கு கால்வாய் தொகுதி நிர்மானிப்பதற்காக ரூபா 997,448 பெறுமதியான நிர்மானப்பொருட்கள் 2016 நவமம்பர் 16 ஆம் திகதி பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தன. இக் கருத்திட்டதை 2016 மார்ச் 31 திகதி அரிசோதனையின் போது கருத்திட்டத்தின் 75 சதவீத அளவு வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன், இதற்காக வழங்கப்பட்ட சீமெந்து பைகள் (50 கி.கி) 145, மெடல் கியுப் 1¼ மற்றும் கல் 6x9 கியுப் 6 அளவு நிர்மான பொருட்கள் தரைப்படை வளவில் நிருத்தப்பட்டிருந்தன.

**(ஈ) பாதை கொன்கிரீட் இடல்**

---

குண்டசாலை பிரதேச சபையினால் பல்வேறு ஒதுக்கீடுகளின் மீது அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த பாதைகளின் வேலை பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் Rebound hammer test பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் கொன்க்ரீட் கலவையின் உறுதி 20 க்கும் குறைந்த மட்டத்தில் நிலவியதன் காரணமாக கொன்க்ரீட் கலவை உறிய நியமதிதிற்கு மாற்றமானதுடன், கொன்க்ரீட் கலவை 5 பலவீன பாதைகளுக்காக ரூபா 2,245,534 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

**3.9 கழிவு பொருள் முகாமை**

---

ஜபன் அரசின் நிதி அன்பளிப்பின் கீழ்2015 ஆண்டின் ஜயிகா நிறுவனத்தால் ரூபா 100,000,000 பெறுமதியான சுய செயற்பாட்டு வாயு தொழில்நுட்ப இயற்கை பசலை உற்பத்தி கைதொழிற்சாலையொன்று குண்டசாலை மற்றும் பாததும்பர பிரதேச சபைகளுக்காக பெற்றுக்கொடுத்திருந்த போதிலும், உற்பத்தி செய்யப்படும் பசலை அளவிற்கு போதுமான பசலை கொட்க்கூடிய இயந்திரமொன்று 2017 மார்ச் 31 திகதி வரை பெற்றுக்கொடுக்கப்படடிருக்காததனால் கருத்திட்டத்தின் வெற்றிக்கி அது தடையாய் இருந்தது.மீளாய்வாண்டின் பசலை 15150 கி.கிராம் உற்பத்தி செய்து இருந்த போதிலும்

விற்பனைக்காக பொருத்தமான திட்டமொன்று நடைமுறைபடுத்திருக்கவில்லாததுடன், இயற்கை பசலை உற்பத்திற்காக பயன்படுத்தாத உக்கல் அடையாத பொருட்கள் மீள் சுலற்ச்சிற்கு உற்படுத்தப்படாது சூழலிற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இடப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றியும் பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் இடையில், போதியளவு விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 39 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 110,625,000 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் செய்யப்படாமல் முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 06 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட ரூபா 425,000 ஆன வருமானத்தின் எவ்வித வருமானமும் ஈட்டிருக்கவில்லை.

### 4.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு செயளாற்றுகை

சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் 3 ஒன்றுகூடல் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்.
(ஆ) கணக்கீடு.
(இ) பணம் மற்றும் வங்கி செயல்
(ஈ) வாகன கட்டுப்பாடு.
(உ) வருமான நிருவாகம்.
(ஊ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(எ) ஒப்பந்தக் கட்டுப்பாடு.